# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.411/2022 P.W.7

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | குணசேகரன் | த–பெ | உடையப்பன் |
| ஊர்: | : | பெரிய கோட்டை | | |
| வயது: | : | 46/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஓட்டுநர் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.03.2026**

**எதிரி ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து ஓட்டுநராக பணி செய்து வருகிறேன். 14.11.2015 அன்று மாலை 4.00 மணியளவில் ரயில்வே கேட் சாலை வழியாக சென்று கொண்டிருந்த போது நபர் ஒருவரை பிடித்து போலீசார் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டு 21 கிராம் நகையை திருடியதாக தன்னிச்சையாக வாக்குமூலம் அளித்தார். அந்த ஆவணத்தில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடைது தான். அது **கையொப்பம் அ.சா.ஆ.6**. மேற்படி வாக்குமூலத்தின் அடிப்படையில் தேவக்கோட்டைக்கு போலீசார் அழைத்து சென்றார்கள். அங்கு வழக்கு சொத்தை போலீசார் கைப்பற்றினார்கள். அந்த ஆவணங்களிலும் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணங்களில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான், அவைகள் முறையே **அ.சா.ஆ.7 மற்றும் 8**. போலீசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் சா.பொ.1 ஐ தான் தேவக்கோட்டையில் உள்ள எதிரியின் வீட்டில் வாழைமரத்தடியில் புதைத்து வைத்திருந்த நகை ஆகும். எங்கள் முன்னிலையில் தான் நகை எடுத்தார்கள்.

எதிரி இன்று ஆஜரின்மையால் வழக்கு விசாரணை முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.04 13:02:23 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.